விருதுநகர் நிருவாக மாவட்டப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திருமதி.சி.சசிகலா,இ.அ(தோட்டக்கலை),

எண்.1680/ஆ2/2024 **நாள்.21.05.2024**

பொருள்: மதிப்பு நிர்ணயம் - விருதுநகர் பதிவு மாவட்டம் - சிவகாசி சார்பதிவகம் - ஆவண எண். 3093/2024 - துரைச்சாமிபுரம் கிராமம் - சர்வே எண். 583/1B1 "ஸ்ரீ பாலாஜி நகர்" - புதிய மனைப்பிரிவுக்கு - மதிப்பு நிர்ணயம் செய்து ஆணையிடல் தொடர்பு.

பார்வை: சார்பதிவாளர், சிவகாசி கடித எண். 129/2024 நாள்.18.03.2024

****

ஆணை:

விருதுநகர் பதிவு மாவட்டம், **சிவகாசி சார்பதிவகம்,** ஆவண எண். 3093/2024-ல் கண்ட துரைச்சாமிபுரம் கிராமம், சர்வே எண்.583/1B1-ல் உருவாக்கப்பட்டுள்ள "ஸ்ரீ பாலாஜி நகர்" புதிய மனைப்பிரிவுக்கு மதிப்பு நிர்ணயம் செய்து ஆணை வழங்கிட வேண்டி பார்வையில் காணும் சார்பதிவாளரின் கடித வழி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி மதிப்பு நிர்ணய கருத்துரு பரிசீலிக்கப்பட்டதில், சிவகாசி சார்பதிவகம், **ஆவண எண்.3093/2024**-ல் துரைச்சாமிபுரம் கிராமம், சர்வே எண். 583/1B1 நிர் ஹெக்டேர் 0.81.00க்கு ஏக்கர் 2 உள்ள நிலத்தை வீடுகள் கட்ட பல பிளாட்டுகளாக பிரித்து பாதைகள் ஒதுக்கி **"ஸ்ரீ பாலாஜி நகர்"** என பெயரிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள புதிய மனைப்பிரிவிற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களின் ந.க.எண்.GMKQP2PK/VNR/2023/TCP நாள்.24.08.2023, மனைப்பிரிவு வரைபட அனுமதி எண்.ம.வ/ந.ஊ.து.இ(விருமா) எண்.101/2023(O) மற்றும் வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், D.கன்சாபுரம் ஊராட்சித் தலைவரின் வீட்டுமனைப்பிரிவு அனுமதி எண்.02/2023, நாள்.11.03.2024-ன்படி குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதில், பிளாட்எண்.05-க்கு 124.21 ச.மீட்டருக்கு 1337 சதுரடி பரப்பு கொண்ட மனைநிலமாக ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆவண சொத்தின் நிலம் அமைவிடம், உள்ளூர் விசாரணை, வாக்குமூலம், சுற்றுப்புற புல எண்களின் வழிகாட்டி மதிப்பு மற்றும் ஆவணப்பதிவுகளின்

அடிப்படையில் மேற்படி கிராம சர்வே எண். எண்.583/1B1-க்கு **குடியிருப்புப்பகுதி சிறப்பு வகை -I (RS-I) என்ற வகைப்பாட்டில் ச.அடி1.க்கு ரூ.81/- (ரூபாய் எண்பத்து ஒன்று மட்டும்)** என மதிப்பு நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது. மேற்படி மதிப்பு நிர்ணயம் குறித்து இணையதளத்தில் சீராக்கம் செய்ய சார்பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேற்படி மதிப்பு நிர்ணயம் சம்மந்தப்பட்ட புல எண்ணுக்கு மட்டுமே பொருந்தும். சார்பதிவாளரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பு நிர்ணய கருத்துருக்களில் விடுதல் ஏதும் இருப்பின், அதனால் ஏற்படும் மதிப்பு இழப்புக்கு சம்மந்தப்பட்ட சார்பதிவாளரே முழுபொறுப்பாவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் மேற்படி சர்வே எண்கள் அரசு புறம்போக்கு நிலங்கள்/ அனாதீனம்/ வக்போர்டு வாரிய சொத்துக்கள்/ இந்துசமய அறநிலையத்துறை சொத்து அல்ல என்பதனையும், நீர் நிலை புறம்போக்கு அல்ல என்பதனையும், ஆவணத்தின் உரிமை குறித்தும் உறுதி செய்து கொள்ள சார்பதிவாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மதிப்பு நிர்ணயம் குறித்து ஆவணதாரருக்கு ஆட்சேபணை ஏதுமிருப்பின், இராமநாதபுரம் மண்டல துணைப்பதிவுத்துறைத்தலைவர் அவர்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என்ற விவரம் ஆவணதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

21.5.24

மாவட்டப்பதிவாளர் (நிர்),
விருதுநகர்

பெறுநர்

1) சார்பதிவாளர்,
சிவகாசி

2) திருமதி.K.தாயார்
திருமதி.K.பிருந்தா
சிவகாசி